# ஏப்ரல் – 03 – புதன்

**தூய ரிச்சர்ட்**

**“என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர்”. (யோவா 5:24)**

## முதல் வாசகம் : ஏசாயா 49 : 8 – 15

ஆண்டவர் கூறுவது இதுவே: தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன் விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன் நாட்டை மீண்டும் நிலைநாட்டவும் பாழடைந்து கிடக்கும் உரிமைச் சொத்துகளை உடைமையாக்கவும் நான் உம்மைப் பாதுகாத்து மக்களுக்கு ஓர் உடன்படிக்கையாக ஏற்படுத்தினேன். சிறைப்பட்டோரிடம், ”புறப்படுங்கள்” என்றும் இருளில் இருப்போரிடம் ”வெளிப்படுங்கள்” என்றும் சொல்வீர்கள். பாதையில் அவர்களுக்கு மேய்ச்சல் கிடைக்கும் வறண்ட குன்றுகள் அனைத்திலும் பசும் புல்வெளிகளைக் காண்பர். அவர்கள் பசியடையார் தாகமுறார் வெப்பக் காற்றோ, வெயிலோ அவர்களை வாட்டுவதில்லை. ஏனெனில் அவர்கள்மேல் கருணை காட்டுபவர் அவர்களை நடத்திச் செல்வார் அவர் அவர்களை நீரூயஅிற்றுகள் அருகே வழிநடத்துவார். என் மலைகள் அனைத்தையும் வழியாக அமைப்பேன் என் நெடுஞ் சாலைகள் உயர்த்தப்படும். இதோ, இவர்கள் தொலையிலிருந்து வருவார்கள் சிலர் வடக்கிலிருந்தும் சிலர் மேற்கிலிருந்தும் சிலர் சீனிம் நாட்டிலிருந்தும் வருவார்கள். வானங்களே, மகிழ்ந்து பாடுங்கள் மண்ணுலகே, களிகூரு் மலைகளே, அக்களித்து ஆர்ப்பரியுங்கள் ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார் சிறுமையுற்ற தம் மக்கள்மீது இரக்கம் காட்டியுள்ளார். சீயோனோ, ”ஆண்டவர் என்னைக் கைநெகிழ்ந்துவிட்டார் என் தலைவர் என்னை மறந்து விட்டார்” என்கிறாள். பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்

## நற்செய்தி : யோவான் 5 : 17 - 30

அக்காலத்தில் இயேசு யூதர்களிடம். ”என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார் நானும் செயலாற்றுகிறேன்” என்றார். இவ்வாறு அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறியதோடு நில்லாமல் கடவுளைத் தம் சொந்தத் தந்தை என்று கூறித் தம்மையே கடவுளுக்கு இணையாக்கியதால் யூதர்கள் அவரைக் கொல்ல இன்னும் மிகுந்த முயற்சி செய்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்துக் கூறியது. ”மகன் தாமாக எதையும் செய்ய இயலாது. தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கிறார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தந்தை மகன் மேல் அன்புகொண்டு தாம் செய்யும் அனைத்தையும் அவருக்குக் காட்டுகிறார் இவற்றைவிடப் பெரிய செயல்களையும் அவருக்குக் காட்டுவார். நீங்களும் வியப்புறுவீர்கள். தந்தை இறந்தோரை எழுப்பி அவர்களை வாழ வைப்பதுபோல மகனும் தாம் விரும்பியவர்களை வாழவைக்கிறார். தந்தை யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. தமக்கு எல்லாரும் மதிப்புக் கொடுப்பதுபோல மகனுக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மகனுக்கு அளித்துள்ளார். மகனை மதியாதவர் அவரை அனுப்பிய தந்தையையும் மதிப்பது இல்லை. என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள் ஏற்கெனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். காலம் வருகிறது. ஏன்இ வந்தே விட்டது. அப்போது இறைமகனின் குரலை இறந்தோர் கேட்பர் அதைக் கேட்போர் வாழ்வர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தந்தைஇ தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பது போல மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்குமாறு செய்துள்ளார். அவர் மானிடமகனாய் இருப்பதால்இ தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் தந்தை அவருக்கு அளித்துள்ளார். இது பற்றி நீங்கள் வியப்புற வேண்டாம். காலம் வருகிறது அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர் தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர். நானாக எதுவும் செய்ய இயலாது. தந்தை சொற்படியே நான் தீர்ப்பிடுகிறேன். நான் அளிக்கும் தீர்ப்பு நீதியானது. ஏனெனில் என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்“ என்றார்.

**தியானம் :** ஒருவரின் சொல்லும் செயலும்தான் நம்மை அவரில் நம்பிக்கை வைக்க தூண்டுகின்றது. தொழிற்சாலைகளில் பலர் வேலை செய்தாலும் ஒருசிலர்தான் தலைமைப் பதவிக்கு தேர்வு செய்யப் படுகின்றார்கள். அதற்கு அவர்களின் தனிப்பட்ட முயற்சியும், முதலாளிகளுக்கு அவர்மேல் உள்ள நம்பிக்கையும்தான் காரணம். அந்த நம்பிக்கையை கடைசிவரை காப்பாற்றுபவர்களும் உண்டு. பதவி அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து அதை இழப்பவர்களும் உண்டு. இன்றைய நற்செய்தியில் யேசு நாம் நம்மைப் படைத்த இறைவனில் நம்பிக்கை கொண்ட வர்களாக வாழ நமக்கு அழைப்பு விடுக்கின்றார். முதல் வாசகத்தில் நாம் மனமாற்றம் பெற்று எமது பாவ வழிகளைவிட்டு இறைவனிடம் திரும்பி வரும்போது எவ்வாறான ஆசீர்வாதங்களை, நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம் என்று பார்க்கின்றோம். இத்தவக்காலம் அதற்காக எம்மை அழைக்கின்றது. நாம் மனம் மாறவில்லை என்றால் நாம் செய்யும் தவ முயற்சிகள் எல்லாம் வீணாகப் போய்விடும். நாம் யாரையும் கொலை செய்வதில்லை. ஆனால் எமது வார்த்தையால், செயலால் அவர்களின் மனங்களை கொண்றுவிடுகின்றோம். இது கொலை இல்லையா? கத்தி எடுத்து, துப்பாக்கி எடுத்து கொல்வதை விட கொடியது இதுதான். ஒரு மனிதனிடம் இருக்கும் நல்ல அவயவமும் கெட்ட அவயவமும் எது தெரியுமா? அது நாவும் இருதயமும் தான். வாயில் இருந்து வரும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்போது, இதயத்தில் நல்ல சிந்தனை பிறக்கும்போது அவை நல்லவை. வாயின் வார்த்தைகள் மற்றவர்களை காயப்படுத்தும்போதும், கெட்ட சிந்தனைகள், செயல்கள் வெளிப்படும் போதும் அவை கெட்டவை. எனவே எமது நாவையும், இருதயத்தையும் நல்லவைகளாக பேணுவது யாரின்பொறுப்பு? தண்டனை தீர்ப்பிற்கு ஆளாகாத வண்ணம் எம்மை தயார்படுத்த இத்தவக்காலம் நம்மை வழி நடத்தட்டும்.